# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா

முனைவர் ம. பிரகாஷ்

தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி.

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா
முனைவர் ம. பிரகாஷ்

**தமிழ்த்துறை**
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக்
குழுவின் 'ஏ' தகுதி ஐ.எஸ்.ஓ.
9001:2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி - 642 001

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்புக்குழு

முனைவர் த.பரமேசுவரி(துறைத்தலைவர்),
முனைவர் த. கீதாஞ்சலி,
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா,
முனைவர் ம. சித்திரகலா, முனைவர் ந. பிரகாஷ்,
முனைவர் மு. சுகந்தி, முனைவர் இரா. ஜெயந்தி,
பேரா. ர.சூர்யா, பேரா. அ. மகபுபூ.



முதற்பதிப்பு : டிசம்பர், 2018

வெளியீடு : டுடே பதிப்பகம்
192, பெல்ஸ் சாலை,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

கணினி : டுடே கிராபிக்ஸ்

அச்சாக்கம் : டுடே பிரிண்டர்ஸ்
14/192, பெல்ஸ் ரோடு,
எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ், சென்னை-05.
அலைபேசி:98400 83738 / 044-2855 3797

பக்கங்கள் : xxiii + 483 = 506

விலை : ரூ.420/-

ISBN : 978-93-87882-47-8

# பொருளடக்கம்


1. தமிழ் இலக்கியங்களில் இறை இயல் காட்டும் படிநிலை வளர்ச்சிகள்
   முனைவர் அமுதன் 1
2. திருமுறைகளில் திருக்குறள்
   N.S. அசோக்குமார் 7
3. சிலப்பதிகாரம் காட்டும் அரசியல் அறம்
   பா. அந்தோனியம்மாள் 15
4. பரிபாடலில் திருமால் வழிபாடு
   முனைவர் ப. அருள்ஜோதி 19
5. தமிழ் இலக்கியத்தில் இறைநெறி
   அனிதா 26
6. இசுலாமியத் தமிழிலக்கியம் காட்டும் இறைநெறிகள்
   முனைவர் இரா. ஆரோக்கியமேரி 32
7. தமிழ்ச் சித்தர் இறைநெறி
   முனைவர் வெ. இராம்ராஜ் 38
8. திருக்குறளில் இறைமை நெறி
   பேரா. முனைவர் இலலிதாசுந்தரம் 46
9. திருமுருகாற்றுப்படையும் தெய்வம் போற்றும் மரபும்
   முனைவர் வே. கண்ணதாசன் 53
10. சர்வமும் இறைமயம்
   பேரா. பா. கலைச்செல்வி 61
11. நிலம் சார்ந்த இறைநெறி
   ம. காயத்ரி 64
12. ஔவையின் பார்வையில் இறைவன்
   முனைவர் உ. கிருஷ்ணன் 70
13. சைவசமயமும் இறைநெறியும்
   முனைவர் த. கீதாஞ்சலி 77
14. சங்க இலக்கியத்தில் திருமால் வழிபாடு
   முனைவர் ச. குருஞானாம்பிகா 83
15. ஆதிரையான் – ஆடவல்லான் வழிபாட்டு வளர்ச்சி நிலை
   ர.கோவர்தனன் 88

16. திருவள்ளுவர் வரையறுத்த இறைநெறிக் கோட்பாடு 97
திருக்குறள் தூதர் ம. சக்கரவர்த்தி

17. கண்ணதாசன் கவிதைகளில் இறைநெறிகள் 106
இரா. சங்கரேஸ்வரி

18. நால்வரின் பக்தி நெறிகள் 112
ப. சவிதா

19. அவ்வை குறட்பாக்களில் சைவ சித்தாந்த நெறி 119
முனைவர் சே. சாந்தி

20. இலக்கியங்களில் இறைநெறியின் நோக்கும் போக்கும் 125
முனைவர் ம. சித்ரகலா

21. நாட்டுப்புறத் தெய்வங்களும் திருவிழாக்களும் 135
A. சிவபாக்யம்

22. பகுத்தறிவு – வழிபாட்டு நெறி 142
முனைவர் மு. சுகந்தி

23. அனுராதாரமணன் நாவல்களில் இறைநெறிகள் 148
கி. சுந்தரம்

24. பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்களுள் இறைமைப் பெண்கள் 153
பேரா. ர. சூர்யா

25. மனித மனமும் இறையும் 158
முனைவர் ந. ஜெயசுதா

26. குலசேகர ஆழ்வாரின் பக்திநெறி 162
முனைவர் இரா. ஜெயந்தி

27. சங்க இலக்கியத்தில் செவ்வேள் 168
முனைவர் ஜமுனாசெல்வராஜ்

28. தொல்காப்பியத்தில் இறைநெறி 173
மு. செல்வகுமார்

29. செவ்விலக்கியத்தில் மாயோன் வழிபாடு 182
முனைவர் ம. தமிழ்வாணன்

30. ஆழ்வார் பாசுரங்களில் – அகநெறி 193
ந. திருமால்

31. நீலகிரி தொரையரின் கோவில் அமைப்பு முறை 196
ம. தீபா

32. இறைநெறியில் முருக தத்துவம் 202
முனைவர் கி. துர்காதேவி

33. திருமுருகாற்றுப்படையில் இறைநெறி
முனைவர் யு. துர்காதேவி 209

34. இருக்க இயலாத இறைநெறிகள்
Dr. K.I.N. DEIVA AKANDAN ARAMAN 215

35. அறநெறியின் இறைநெறிகள்
திருக்குறள் தூதர் சு. நடராசன் 222

36. திருக்குறள் உணர்த்தும் இறையியல் கோட்பாடு
முனைவர் நயம்பு.அறிவுடைநம்பி 227

37. குறிஞ்சி நிலத் தெய்வம்
த. நர்மதா தேவி 235

38. நாகூர் ரூமியின் சிறுகதைகளின் வழி காணப்படும் இசுலாமியக் கருத்துகள்
கா. நஸ்ரீன் பாத்திமா 240

39. தமிழ் இலக்கியத்தில் முருகவழிபாடு
அ. நித்யா 245

40. இராமனின் இறைநெறிக்கொள்கை
முனைவர் வெ. நிர்மலா 250

41. சமணம் சுட்டும் இறைநெறி
முனைவர் ஜெ. நீலாக்சி 258

42. பாரதியாரின் இறைநெறி
முனைவர் எ. பச்சையப்பன் 262

43. திருப்பாவையில் இறைநெறி
வீ. பவானி 271

44. இறைநெறியில் புதுக்கவிதை – ஓர் ஆய்வு
முனைவர் கோ.வ. பரத்வாஜ் 278

45. திருமுருகாற்றுப்படை – சுவையும் சொல்லாக்கமும்
முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன் 283

46. வைணவ இலக்கியத்தில் ஆண்டாளின் இறைநெறி
முனைவர் ச. பாக்கியலஷ்மி 299

47. திருமூலர் கூறும் துறவு மார்க்கம்
முனைவர் ஜீ. பாண்டியலட்சுமி 305

48. பரிபாடலில் திருமால் செவ்வேள் வழிபாடு – ஓர் ஒப்பீடு
இரா. பிரகாஷ் 312

49. தமிழ்ச் சமூக வரலாறு: முருகனின் பரிமாணங்கள்
முனைவர் ம. பிரகாஷ் 320

50. பட்டினத்தார் பாடல்களில் இறையுணர்வு
ப. பிரதாப் 326

51. திருக்காளத்திப்புராணம் காட்டும் கண்ணப்பரின் இறைநெறி
ப. பிரியா 333

52. பெரியபுராணமும் : விவிலியம் காட்டும் இறைநெறிகள்
பா. பூங்காவனம் 338

53. விவிலியம் காட்டும் இறைநெறி
சு. பெர்சியா ஜீவபாய் 343

54. டி. செல்வராஜ் நாவல்களில் இறைநெறி
முனைவர் பி. மஞ்சுளா 348

55. சமயங்கள் வளர்த்த தமிழ்
அ. மகபூபு 353

56. தமிழ் இலக்கியங்களில் இறைநெறி
முனைவர் ச. மதுரா 364

57. சங்ககால நாடறி நன்மணமும் தாலியும்
முனைவர் த. மலையரசி 369

58. திருமுருகாற்றுப்படையும் இறைநெறியும்
முனைவர் மு.தேவராஜ் 374

59. திரு.வி.க.வின் பொதுமை நோக்கிய சைவம்
பேராசிரியர் ப. மகாலிங்கம் 383

60. இலக்கியத்தில் ஆழ்வார்களின் இறைநெறி
முனைவர் பே. மகேஸ்வரி 389

61. இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா உணர்த்தும் இறைநெறி
பேராசிரியர் முனைவர் வே. மாணிக்கம்மாள் 395

62. திருவள்ளுவரின் கடவுள் கொள்கை 402
முனைவர் முகிலை இராசபாண்டியன்

63. சிலப்பதிகாரம் கூறும் இறைவழிபாட்டு மரபுகள் 407
அ. முத்துகிருஷ்ணன்

64. கம்பனில் வைணவ நெறி 411
முனைவர் சி. முத்துமாலை

65. தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள் 419
க. முருகேசன்

66. திருவள்ளுவர் வரையறுத்த மனிதத் தெய்வக் கோட்பாடுகள்
முனைவர் கு. மோகனராசு 425

67. நாட்டுப்புற பாடல்களில் இறைவழிபாடு
முனைவர் ராதிகா மேகநாதன் 431

68. புரட்சித்துறவி வள்ளலாரின் இறைநெறி
முனைவர் த. ராஜீவ்காந்தி 437

69. இலக்கியங்களில் நடுகல் வழிபாட்டுமுறைகளும், தற்கால வழிபாட்டுமுறைகளும்
முனைவர் வே. வளர்மதி 442

70. சங்க இலக்கியத்தில் திருமால்
வி. வாசுதேவன் 448

71. பன்னிரு ஆழ்வார்களின் பக்திநெறி
து. விசாலாட்சி 456

72. சங்க இலக்கியங்களில் சிவ வழிபாடு
ரா. ராஜா 466

73. FACTS OF INCOME INEQUALITY IN INDIA
SHAHUL HAMEED, NGOZI ADELEYE, M. ABDUL JAMAL 473

# 39. தமிழ் இலக்கியத்தில் முருகவழிபாடு

அ. நித்யா
முனைவர் பட்டஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி-642001.

மக்கள் தெய்வங்களைப் போற்றும் முறையை வழிபாடு எனலாம். வழிபடும் நிலைமக்களின் இயற்கைச் சூழ்நிலையையும், வாழ்வியல் முறையையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒருகாலகட்டத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை நடத்தினர். தம் வாழ்வு நிலைக்கு ஏற்ப தெய்வத்தை அமைத்துக்கொண்டனர். அந்தந்த நிலத்தில் வாழ்கின்ற மக்களின் தொழில் நிலைக்கு ஏற்பவே தெய்வங்களை துணையாக இந்திரனை தெய்வமாகக் கொண்டனர். காடுவாழ் மக்கள் கால்நடைகள் வளர்ப்புக்கு ஏற்பத் திருமாலைத் தெய்வமாகக் கொண்டனர். நீர்வழி உணவுபெறும் பரதவர்கள் வருணனைத் தெய்வமாகக் கொண்டனர். வேட்டுவர்கள் முருகனைத் தெய்வமாகக் கொண்டனர். இத்தகைய இயற்கைச் சூழலில் வழிபாடும் இயற்கை வழிபாடாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## இயற்கைவழிபாடு

இயற்கையை மக்களின் முதல் ஆசிரியன் எனலாம். இயற்கையில் எழுந்த அச்சம், அழகு, வியப்பு போன்ற உணர்வுகள் வழிபாட்டு நிலைகளிலும் இடம் பெற்றுள்ளன எனலாம். முருகன் சேயோன் என்றும், குறிஞ்சி நிலத்தவன் என்றும், தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளன. வில்லும் வேலும் வேடவர்களின் தொழிலில் இன்றியமையாத பொருள்களாகும். வேலே வழிபடும் பொருளாக ஒருகாலத்தில் கருதப்பட்டிருந்தது. நடுகற்களைச் சுற்றிலும் வேலை நட்டுவைத்து அதனைப் பாதுகாக்கும் வழக்கமும் இருந்ததை,

பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
வேல் ஊன்றுபலகைவேற்று முனை கடுக்கும் (அகம் 67)

எனலாம். மலைவாழ் மக்களுக்கு இன்றியமையாத உணவாகத் தேனும் தினையும் இருந்தன. அத்தேனையும் தினைமாவையும் முருகனுக்குரிய வழிபாட்டில் அன்றுதொட்டு இன்றுவரை போற்றிவருகின்ற இயல்பு குறிப்பிடத்தக்கது.

முருகன் குன்றமர் செல்வனாக இருந்தமையைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.

**இருக்கை சான்றஉயர் மலைத்**
**திருத் தகுசேஎய்!** (புறம் 125)

திருமுருகாற்றுப்படை குறிப்பாக ஐந்துமலைகளையும், பிறஎல்லாக் குன்றுகளையும் முருகன் கோயில் கொள்ளும் இடங்களாகக் குறித்துள்ளமை கருதத்தக்கது .திருமுருகாற்றுப்படை ஆசிரியர் காடு, சோலை, ஆற்றிடைக்குறை, சதுக்கம், சந்தி, பொதியில், மக்கள் மனம் ஆகிய இடங்களில் முருகன் உறைவதாகக் குறிப்பிட்டுள்ளமையை,

**காடும் காவும்,கவின்பெறு துருத்தியும்,**
**யாறும் குளனும்,வேறுபல் வைப்பும்,**
**சதுக்கமும் சந்தியும்,புதுப்பூங் கடம்பும்,**
**மன்றமும் பொதியிலும்,கந்துடைநிலையினும்**
(திருமுருகு,வரிகள் 223-226)

தெய்வம் என்னும் உணர்வு மக்களுக்குத் தோன்றியதற்குத் தங்களை மீறிய செயல்கள் இயற்கையில் நிகழ்ந்தமையால் ஏற்பட்டிருத்தல் வேண்டும். முருகன் கோயில் கொள்ளுகின்ற இடங்களில் மரமும் ஒன்றாகக் குறிக்கப்பட்டுள்ளது. கொடியவர்களுக்கு அச்சத்தைத் தரும் தெய்வமாகவும் முருகன் கருதப்பட்டான் என்பதை,

**றமரா அத்தபே எம்முதிர் கடவுள்**
**கொடிமேனயார்த் தெறூஉம்** (குறுந்.87)

தினையை அறுவடை செய்கின்றவர்கள் அதன் முதற் கதிரை முருகனுக்குப் படைத்து வழிபடுகின்ற நிலையை,

**புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்**
**குடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்** (மேலது.105)

என்ற பாடலின் மூலம் காணலாம்.

பழமையான முருகன் கோயில்களில் இன்றும் வேலுக்கு முதன்மை கொடுத்து வழிபடப்படுவதைக் காண இயலுகின்றது. முருகன் கோயில்களில் மறியறுத்து வழிபாடு செய்கின்ற முறையை திருமுருகாற்றுப்படையால் அறியலாம். ஒருமுகமும் இரு திருக்கைகளும் உடையமுருகன் வடிவே பண்டைய வடிவமாக இருக்கலாம் எனக் கருத இடம் உள்ளது.

## சிறப்புவழிபாடு

சிறப்புவழிபாட்டை **'நைமித்திகம்'** எனக் குறிப்பிடுவார். **'சிறப்பொடு பூசனை செல்லாது'** என்னுமிடத்தில் நித்தியத்தில் ஏற்படுகின்ற குறைபாடுகளை நைமித்திகம் நீக்குமாதலால் சிறப்புவழிபாட்டை முன் கூறியதாகக் குறிப்பிடுவதால் (குறள்.வான்சிறப்பு8 .பரிமேலழகர் உரை ப.20) அறியலாம். முருகனுக்குரிய நாளாகிய கார்த்திகை, விசாகம் இரண்டும் தீர்த்த விழாவிற்குச் சிறந்தவை. தேய்பிறை ச"டி எல்லா மாதங்களிலும் முருகனுக்கு உகந்தவை. இவ்விழாக்கள் கோயில்கள் தோறும் நிலைமைக்கும், செல்வத்திற்கும் ஏற்றமுறையில் வேறுபாடுகளுடன் செய்யப்படுகின்றன.

முருகனுக்கு ஏற்றப்படுகின்ற கொடிகளில் வேல்இ மயில்இ கோழி எழுதப்படலாம் .அவற்றுள் வேலுக்கு முதன்மை அளித்தல் நன்மைசெய்யும் நாள் வழிபாட்டின் பின்னரே சிறப்புவழிபாடு இயற்றுதல் வேண்டும். நாள் வழிபாட்டில் ஏற்படும் குறைகளைச் சிறப்புவழிபாட்டில் விழாவினை அமைத்து நாள்வழிபாட்டுக் குறைகளை போக்குவதை இன்றும் காணலாம். திங்கள் விழா, பெருவிழா, பக்தர்விழா என்ற மூன்றுவகையான தன்மைகளில் முருகன் கோயில்களில் சிறப்புவழிபாடுகள் நடைபெறுகின்றன. மாதந்தோறும் நடைபெறும் விழாக்கள் ஒருநாள் விழாவாகவே நடைபெறுகிறது. ஏழுஅல்லது ஏழு நாட்களுக்குமேல் விழாக்காலம் தொடருமானால் கொடியேற்றி விழாவை நடத்தவேண்டும் என்பது மரபாகும். முருகனுக்கு ஏற்றகொடியாக வேல்இ மயில், கோழி முதலியவை கொள்ளப்படுகின்றன. தினை, பூக்களோடு கலந்து வைத்து ஆட்டுக்குட்டியைப் பலிட்டு நடத்தும் வெறியாட்டுவிழாவில் கோழிக் கொடியை உயர்த்தி சிறப்புவிழா கொண்டாடுதலை திருமுருகாற்றுப்படையும் குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கதாகும்.

**நேர்த்திக் கடன்கள்**

நேர்த்தி என்னும் சொல் நேர்ச்சி எனவும் வழங்கப்பட்டுள்ளது. நான்காம் வேற்றுமைக்குரிய பொருள்களைக் கூறுமிடத்து நேர்ச்சி என்னும் சொல்லை இலக்கண (உரைவளம்) வேற்.மயங்.ப.8) என அதற்கு எடுத்துக்காட்டையும் கூறியுள்ளனர். நேர்த்திக்கடன், விரதங்கள் என்று இதனைப் பகுத்துக் காணலாம். விரதங்கள் உடலை வருத்தி மனத்தை ஒருமுகப்படுத்தும் நிலையில் மேற்கொள்ளப்பட்டவை எனக் கருதலாம். நேர்த்திக்கடன்கள் இருவகையாகச் செய்யப்படுகின்றன. அவைபெற்ற பயனுக்காகச் செய்வது எனவும், பெறவேண்டிய பயனுக்காகச் செய்வது எனவும் இருவகைப்படும் .பண்டைக் காலந்தொட்டு நேர்ச்சிக் கடன்கள் செய்துவரப்பட்டாலும் இலக்கியங்களில் அதுபற்றி செய்திகள் ஒரளவே இடம்பெற்றுள்ளன. முருகனுக்கு எடுக்கப்படுகின்ற நேர்த்திக்கடன்களில் காவடி எடுத்தல், அலகு குத்திக் கொள்ளுதல் போன்றவை குறிப்பிடத்தக்கதாகும். காவடியை பால் காவடி, பன்னீர் காவடி போன்று பல்வேறு நிலைகளில் அமைத்து எடுத்துச் சென்று முருகன் கோயிலில் திருமஞ்சனமாட்டி வழிபாடு நிகழ்த்திகின்றார்கள்.

**விரதங்கள்**

விரதம் என்னும் வடசொல் உண்ணாநோன்பு என்னும் தன்மைக்கு ஒத்ததாகும் .உண்ணாநோன்பினைத் துறவிகளும் இல்லறத்தாரும் மேற்கொள்ளுகின்ற நிலை பழங்காலம்தொட்டு இருந்துவருகிறது. 'நொ' என்னும் சொல்லுக்கு வருந்து என்பது பொருளாகும். நோற்றல், நோன்றுகொள்ளுதல் நோன்பு என்னும் சொற்கள் 'நொ' என்னும் சொல்லை வேர்ச்சொல்லாகக் கொண்டு தோன்றியவை .சமணர்கள் நோன்புகளைப் பல்வேறுநிலைகளில் மேற்கொண்டிருந்தனர் என்னும் குறிப்பு இலக்கியங்களில் காணப்படுகின்றது. புத்த சமயத்தினரும் விரதங்களைப் பல்வேறுநிலைகளில் மேற்கொள்ளும் இயல்பினர் என்பது இலக்கியங்களால் அறியப்படும் உண்மையாகும்.

உண்ணாநோன்பு உடலைத் தூய்மை செய்வதோடு உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி மன அலைச்சலைத்

தவிர்க்கிறது எனலாம். தெய்வத்தின் பெயரால் மேற்கொள்ளப்படுகின்ற உண்ணாநோன்புகள் அச்ச உணர்வோடு பின்பற்றப்படுவதால் ஒருவகை தொடர்ந்து செய்வதற்கு வாய்ப்பாகிறது. 'மருந்தெனவேண்டவாம் யாக்கைக்கு அற்றது போற்றியுணின்' (குறள்.942) என்பதால் உணவுக்கட்டுப்பாடு உடல் நலத்திற்குஉகந்தது என்பதை காட்டுகின்றது. கந்தனுக்குரிய விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதம், கிருத்திகைவிரதம், சட்டிவிரதம், விசாகவிரதம் என்பவை குறிப்பிடத்தக்கவை.

## ஆய்வுமுடிவுகள்

சங்க இலக்கியங்களில் இயற்கை வழிபாடு மிகுதியும் பேசப்பட்டுள்ளது .குறிஞ்சிநில மக்களின் உணவாகிய தேனும் தினையும் படைக்கப் பெற்றமைகருத்திற் கொள்ளத்தக்கது. முருகன் சேயோன் என இயற்கைப் பெயரால் அழைக்கப்பெற்றான். நடுகல் வழிபாடு வழிபாட்டின் முன்னோடியாக இருக்கலாம். காடு, சோலை, ஆற்றிடைக்குறை, சதுக்கம், சந்தி போன்ற இடங்கள் முருகன் உறையும் இடங்களாகக் குறிக்கப்பட்டுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது. வரையறுத்த காலஎல்லையுள் வழிபாடு நடந்ததாகப் பண்டைய இலக்கியங்களில் காணப்படவில்லை. வழிபாட்டில் ஒரு ஒழுங்குமுறை தோன்றிய காலம் பிற்பட்டதாகக் காணப்படுகிறது .முருகனுக்கு உயிர் பலியிடும் வழக்கம் இருந்துள்ளமையை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. மக்கள்பேறு, மழைப்பேறு, கருப்பேறு, திருமணப்பேறு என்பவற்றை மனதில் கொண்டு முருகனை வழிபட்டநிலை காணப்படுகின்றது.

பரங்குன்று, திருச்சீரலைவாய், வெண்குன்று போன்ற தலங்கள் சங்க இலக்கியங்களிலேயே போற்றப்பெற்றுள்ளன. மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களை ஒட்டியே இறைவனுக்குரிய வழிபாட்டுக் காலங்கள் ஏற்பட்டிருக்கலாம். காயத்ரி மந்திரங்களில் முருகனுக்குரிய காயத்ரி மந்திரம் தனியாகப் கூறப்பெற்றுளளது. விழாவின் காலம் ஏழுநாட்களுக்கு மேல் சென்றாலும் கொடியேற்றி விழாச் செய்தல் வழக்கம்.



ISBN 978-93-87882-47-8

டுடே பதிப்பகம்

192, பெல்ஸ்சாலை, சேப்பாக்கம்
சென்னை-5